**செய்தி வெளியீடு எண்: 628** **நாள்: 18.10.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (18.10.2012) தலைமைச் செயலகத்தில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. பி.எச். மனோஜ்பாண்டியன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், திருநெல்வேலி நகரம், கொக்கிரகுளத்தில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையினைச் சுற்றி சிறு பூங்கா மற்றும் சுற்றுச் சுவர் அமைத்து மேம்படுத்தப்பட்ட பணிகளைக் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

திருநெல்வேலி நகரம், கொக்கிரகுளத்தில் உள்ள புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை சுற்றுச் சுவர் இல்லாமல் பாதுகாப்பின்றி இருந்தது. அவ்விடத்தைச் சுற்றிலும் சிறு பூங்கா அமைத்து, சுற்றுச் சுவர் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு மாநிலங்களவை உறுப்பினர் திரு. பி.எச்.மனோஜ்பாண்டியன், 2011 – 2012ம் ஆண்டு தனக்கு ஒதுக்கப்பட் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து 6 லட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கினார்.

இதன் மூலம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையைச் சுற்றிலும் பாதுகாப்பு சுற்றுச் சுவர் காங்கீரிட்டினால் அமைக்கப்பட்டு, அதன் மேல் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாதுகாப்பு கைப்பிடி அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சுவற்றின் பக்கவாட்டில் கிரானைட் கற்கள் ஒட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை அமைந்துள்ள பகுதியை அழகுபடுத்தி புல் தரையுடன் கூடிய சிறு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையினைச் சுற்றி சிறு பூங்கா மற்றும் சுற்றுச் சுவர் அமைத்து மேம்படுத்தப்பட்ட பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் திரு. பி.எச். மனோஜ்பாண்டியன், தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 18.10.2012